பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை


When, only The best is Good Enough
Buy Solide Pumps


தரமானதே சிறந்தது என்றால்
சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆவணி ௴ 13 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 15 (29 - 08 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 169

# இந்தியாவில் குண்டுத் தாக்குதல்

# விடுதலைப் புலிகள் திட்டம்!

## சர்வதேச அமைப்புகளின் ஆதரவு உண்டு என அறிவிப்பு

கொழும்பு, ஆகஸ்ட் 29

**இந்திய அமைதிப் படையினர் வடபகுதியில் நடத்தி வரும் இராணுவ நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும். இல்லையேல் இந்தியாவின் பெரிய நகரங்களில் குண்டுத் தாக்குதல் நடத்துவோம். இதற்கு சர்வதேச கெரில்லா அமைப்புகள் எமக்கு ஆதரவு தர முன்வந்துள்ளன.**

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா பிரதேச பொறுப்பாளர் தினேஷ் தெரிவித்தார் என்று கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை "வீக்கெண்ட்" முன்பக்க முக்கிய செய்தி வெளியிட்டிருக்கிறது.

"வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளை இந்திய அமைதிப்படை உடனடியாக நிறுத்தாத வரை, இந்தியாவின் பெரிய நகரங்களில் குண்டுகளை வெடிக்க வைக்கப் போவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பிரதிக்ஞை எடுத்திருக்கிறார்கள்—

"வவுனியாவில் இருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் தினேஷ் இதனை 'வீக்கெண்ட்'டுக்குத் தெரிவித்தார்.

"சர்வதேச கெரில்லா அமைப்புக்களின் ஆதரவு கிடைக்கும் என்ற தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே இயக்கத் தலைமைப்பீடம் இம்முடிவை எடுத்ததாகத் தினேஷ் தெரிவித்தார்—

"எந்த இந்திய நகரங்களில் குண்டு வெடிக்க வைக்கப்படும் என்றோ—

"எந்த கெரில்லாக் குழுக்கள் ஆதரவு வழங்குகின்றன என்றோ—

இயக்கப் பேச்சாளர் தெரிவிக்கவில்லை"— என்று வீக்கெண்ட் செய்தியில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (அ-எ)

## இந்திய மண்ணில் தீவிரவாதச் செயல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

புதுடில்லி, ஆக. 29

இந்திய மண்ணில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது இந்திய அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்.

புதுடில்லியில் அரசுப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

அமைதிப்படை தனது இராணுவ நடவடிக்கையைக் நிறுத்தாவிடில் இந்திய நகரங்களில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடப் போவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்திருப்பதாகக் கூறப்படும் பயமுறுத்தல் குறித்துக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### $2\frac{1}{2}$ மணி நேரம் துறையில் காத்திருந்த பின்

## கப்பலில் வந்த அகதிகள்

## யாழ். இந்துவில் தங்கினர்

### திடீரெனச் செய்யப்பட்ட முடிவு

யாழ்ப்பாணம், ஆக. 29

சடந்த சனிக்கிழமை தமிழகத்திலிருந்து கப்பல் மூலம் காங்கேசன் துறை வந்து சேர்ந்த அகதிகள் இம்முறை நடேஸ்வரா அகதிகள் மண்டபத்தில் தங்க வைக்கப்படவில்லை.

அகதிகள் பிற்பகல் 2 மணிக்கு வந்து சேர்ந்த பின்னர், அவசர அவசரமாக மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு பி.ப.4.30 மணிக்குப் பின்னரே கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, யாழ். இந்துக்கல்லூரிக்குச் கொண்டு வரப்பட்டனர்.

சனிக்கிழமை அகதிக் கப்பல் வரும் எனத் தெரிந்து காங்கேசன் அகதி மண்டபத்தைச் சூழ பலத்த பாதுகாப்பு செய்யப்பட்ட போதிலும் கப்பல் வந்து சேர்ந்த பின்னரும் அகதிகளை எங்கு தங்க வைப்பது என்பது பற்றி முடிவு

(6 ஆம் பக்கம் பார்க்க)

பொருளாதார முயற்சி நிவாரணம்:

## சரியான விவரம் கொடுக்காதோருக்கு ஒரு வேண்டுகோள்

யாழ்ப்பாணம்: ஆக. 29

பொருளாதார முயற்சிகளை மேற்கொள்வதற்காக நிவாரணம்வேண்டி விண்ணப்பித்திருந்தவர்களில் சரியான விவரங்களை வழங்காதவர்களின் விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சரியான விவரங்களை கொடுக்கத் தவறியவர்கள் தமது பகுதி உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு திருத்தங்களுடன் கூடிய விண்ணப்பங்கள் மீண்டும் திருப்பி அனுப்பப்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவில் இருந்து முதல் மூன்று கப்பல்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

29 - 08 - 88

ஆவணி — 13

திங்கட்கிழமை

சுபநேரம்:

12 05முதல் 01.35வரை

ராகுகாலம்:

07.35முதல் 09.35வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### நேற்றும் யாழ் வந்தது ரயில்!

யாழ்ப்பாணம், ஆக. 29

கொழும்பில் இருந்து நேற்றும் ரயில் யாழ்ப்பாணம் வந்தது.

நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் கொழும்பிலிருந்து புறப்பட்ட இந்த ரயிலில் யாழ்ப்பாணம்வரை 446 பயணிகள் பிரயாணம் செய்தனர்.

நேற்று நண்பகல் 12-50மணியளவில் யாழ் ரயில் நிலையத்தை வந்தடைந்த இந்த ரயில் 491 பயணிகளுடன் மீண்டும் பி.ப. 1-50மணியளவில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. (ஒ-5)

### கூட்டுத் தளபதி வால்டர்

கொழும்பு. ஆக. 29

இலங்கை ஆயுதப் படைகளின் கூட்டுத் தலைமை அலுவலகத் தளபதியாக விமானப் படைத் தளபதி வால்டர் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இப்பதவியை ஜெனரல் சிறில் ரணதுங்க முன்னர் வகித்து வந்தார். (ஒ-எ)

### பெண்கள் தயக்கம்

யாழ்ப்பாணம், ஆக.29

காங்கேசன் துறை கைதிகள் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பார்வையிட அண்மைக் காலங்களில் பெண்கள் தயக்கம் காட்டிவருகின்றனர்.

மேற்படி முகாமில் பெண்களைச் சோதனை செய்யவும், மற்றும் பெண்கள் நலன்களை கவனிக்கவும் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் இதுவரை காலமும் கடமையாற்றிவந்தார்.

இவர் தற்போது இல்லாத காரணத்தினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. (ஒ-9)

உணவு முத்திரை:

### மீண்டும் ஒரு மதிப்பீடு

கொழும்பு, ஆக. 29

உணவு முத்திரை பெறத் தகுதியானவர்களைத் தெரிவு செய்ய மீண்டும் ஒரு மதிப்பீடு நடத்த அரசு முடிவு செய்திருக்கிறது.

உணவு முத்திரைத் திட்டத்துக்கு உதவுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே இலங்கை அரசு இம்முடிவை எடுத்திருக்கிறது. (ஒ-எ)

### தண்டனை

காரைநகர் ஆக 29

இயக்கப் பெயரைப் பாவித்து வாகனக் கடத்தலில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் விடுதலைப் புலிகளால் புதுவித தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.

சுலோக அட்டையுடன் அந்த இளைஞர் வாரிவளவு பிரதான வீதி வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். (ஒ-73)

முச்சந்தி முரளி



வயதும் எண்பத்திரண்டாச்சு. எண்டாலும் தனக்கு தேகசுகம் ஜாஸ்தி எண்டு சொன்னவர். அதாலை அவரே வேட்பாளரா கலாம். மற்றவை எல்லாம் வீணாக் கொட்டாவி விடுற நிலைமைதான் போலை......!

### சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஆக.29

நேற்று நண்பகல் கல்வியங்காட்டுப் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் எஸ், பாஸ்கரன் என்பவராவார். (ஒ-க)

2 பாதைகளோடு மேலதிகமாக

## உலக வங்கி உதவியில் 2 மோட்டார் படகுகள்

### தீவுப்பகுதி கடற் சேவைக்கு

யாழ்ப்பாணம். ஆக. 29

தீவுப்பகுதி மக்களின் பிரயாண வசதிக்காக யாழ். மாவட்டத்துக்கு இரண்டு புதிய கடவுப் படகுகளையும் (பாதைகளையும்) இரண்டு மோட்டார் படகுகளையும் பெருந்தெருக்கள் அமைச்சு வழங்கவிருக்கின்றது.

இந்தப் படகுகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை யாழ் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் பிரஸ்தாப அமைச்சுடன் மேற்கொண்டிருக்கிறார்.

இரண்டு பாதைகளும் அடுத்த மாதமளவில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உருக்கிலான இந்த படகு ஒவ்வொன்றும் 13 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்ததாகும்.

இரண்டு மோட்டார் படகுகளும் உலகவங்கியின் நிதி உதவியுடன் பெறப்படும். ஒவ்வொரு படகிலும் சுமார் 100 பிரயாணிகளை ஏற்றிச் செல்ல முடியும். (ஒ-ஐ)

## இந்திய இராணுவ உடையில் சென்று தாக்குதல்

### நடத்திய விடுதலைப் புலிகள்

கொழும்பு, ஆக. 29

இந்திய இராணுவச் சீருடையில் சுமார் பத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மாங்குளம் இந்திய அமைதிப்படை முகாமுக்குள் நுழைந்து தாக்குதலை நடத்தினர் என்று தகவல் வெளியாகி உள்ளது.

இத்தாக்குதலில் கேர்ணல் இராமனுடன் 2 ஜவான்கள் உயிரிழந்தனர் என்றும் இன்னொரு ஜவானைக் காணவில்லை என்றும் கொழும்பு 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

மாங்குளம் அமைதிப் படை முகாம், பொலீஸ் நிலையம், இலங்கை இராணுவ முகாம் ஆகியவற்றின் அருகில் உள்ளது.

வெள்ளி இரவு 10-30க்கும் 11மணிக்கும் இடையில் மூன்று சூட்டுச் சத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பூஸா உண்ணாவிரதிகள் நிலை குறித்து காமினி

### ஜே ஆரைச் சந்தித்துப் பேச்சு

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் பூஸா சிறைக்கைதிகள் பற்றி அமைச்சர் காமினி திஸநாயக்கா, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசினார்.

உண்ணாவிரதமிருக்கும் சிறைக்கைதிகளில் இருவரின் நிலை கவலைக்கிடமானதாக உள்ளதாக அறிவிக்கப்பட்டதன் பின்னரே இச்சந்திப்பு நடந்தது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் அமைச்சர் காமினி திஸநாயக்காவைச் சந்தித்து இது குறித்துப் பேசினார் என்பது தெரிந்ததே. (ஒ எ)

ஐக்கிய தேசியக் கட்சியின்

## ஜனாதிபதி வேட்பாளர்: இன்று தெரிய வரலாம்

கொழும்பு, ஆக. 29

இன்று திங்கள் மாலை ஸ்ரீகோதாவில் நடைபெறும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது முடிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

திரு. ஜெயவர்த்தனா மீண்டும் போட்டியிடாத பட்சத்தில் பிரதமர் பிரேமதாஸாவே தெரிவாகலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

உபஜனாதிபதி பதவிகள் இடம்பெறக் கூடிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரெழு வாசியின் மரணம்: தாக்குதல் காரணமா?

யாழ்ப்பாணம், ஆக 29

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நேற்றுக் காலை இறந்த ஊரெழு வாசியான சறுவல்துரை (வயது 40) என்பவரின் மரணத்துக்குக் காரணம் என்ன?

சுமார் ஒருமாத காலத்துக்கு முன்னர் இவரது மண்டையில் அமைதிப்படையினர் துவக்குப் பிடியால் தாக்கியிருந்தனர் எனக் கூறப்படுகிறது.

மரணத்துக்கு அந்தத் தாக்குதலைச் சம்பந்தப்படுத்திச் சந்தேகம் எழுப்பப்படுகிறது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது;

கடந்த சுமார் ஒரு மாதத்தின் முன் பிரஸ்தாப நபர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது அவ்வழியாக வந்த அமைதிப் படையினர் துவக்குப் பிடியினால் இவரது மண்டையில் அடித்து விட்டுச் சென்றுவிட்டனர் என்று சொல்லப்படுகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல்களை செல்லுபடியற்றவை என்று

### அறிவிக்கக் கோருகிறது ஜே. வி. பி.

கொழும்பு, ஆக. 29

நடந்து முடிந்த மாகாணசபைத்தேர்தல்கள் செல்லுபடியாகாது என்று அறிவிக்கும்படி மக்கள் விடுதலை முன்னணி தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

"கடிதத்துக்குப் பதிலளிக்கவேண்டும் என்று சட்டபூர்வமான கடப்பாடு இருந்தால் ஒழிய நான் பதில் அளிக்கப் போவது இல்லை" – இப்படி தேர்தல் ஆணையாளர் கொழும்புச் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் இக்கடிதத்தின் நகலை கம்பஹா எம். பி. திரு. எஸ் டி. பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பித்து இருந்தார்.

கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:—

1982இல் நடந்த சர்வசனவாக்கெடுப்பு, 1988 இல் நடந்த மாகாண சபைத் தேர்தல் ஆகியனவற்றில் மோசடிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அக்டோபரில் பாட நூல்

யாழ்ப்பாணம், ஆக.29

1989 ஆம் ஆண்டிற்குரிய யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான இலவசப் பாடநூல்கள் அக்டோபர் மாதம் இங்கு வந்துசேரும்.

இவ்வாறுயாழ்.மாவட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இலவச பாட நூல்கள் விநியோகம் தொடர்பாகக் கொத்தணி அதிபர்கள், வட்டாரக் கல்வி அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று விரைவில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-க)

### நேற்று 3ஆவது நாள்

யாழ்ப்பாணம், ஆக 29

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயமுன்றலில் பூஸா கைதிகளின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக சுழற்சி முறை உண்ணாவிரதம் நேற்று மூன்றாவது நாளாக மேற்கொள்ளப்பட்டது.

இதில் பல பொதுமக்களும் அபிமானிகளும் கலந்து கொண்டனர். (ஒ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எங்களிடம் நியாய மான விலையில் தரமான ஆங்கிலம், தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் (Olymbiya and Remington) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க:- சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி, யாழ்ப்பாணம். (C 6435)

CB 125 T கொண்டா மோட்டார் சையிக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: K. வைரமுத்து இல: 46, கலட்டி அம்மன் கோவில் வீதி, யாழ்ப்பாணம். (6203)

தென்னை, மாமரங்களுடன் கூடிய வீடு கட்டுவதற்கேற்ற 3 பரப்புக் காணி இல, 768 பஸ் வண்டிச்சாலையில் கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் அமைந்துள்ளது. தொடர்பு: மு. விசாலாட்சிப்பிள்ளை கும்பளாவளைப் பிள்ளையார் வீதி, அளவெட்டி வடக்கு. (6065)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, அலுமாரி, கட்டில், Show - Case, கண்ணாடிமேசை, Office மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், விருந்தைக் கதிரைகள், பலவித பித்தளைப் பொருட்கள், Steel அலுமாரி, மெற்றல் கதிரைகள் மற்றும் பலவிதமான பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென். பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5995)

பெரிய 2 கதவு குளிர் சாதனப்பெட்டி கடைப் பாவனைக்கு உரியது உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5994)

ஒருநாள் கோழிக் குஞ்சு 01--09--88ல் லேமன் (சிவப்பு) 05-09-88ல் ஹைலைன் (வெள்ளை) ஆகிய இனக் குஞ்சுகள் விநியோகிக்சப்படும். தேவையானவர்கள் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும். யாழ்ப்பாணத்தில் ஈஸ்ரன் ரேடர்ஸ் 95/2 ஸ்டான்லிவீதி, சரவணா ரேடர்ஸ் 174, ஸ்டான்லி வீதி, மானிப்பாயில் ஜீவன் மத்திய சந்தை, மானிப்பாயில்பெற்றுக் கொள்ளலாம் (C6056)

சுன்னாகத்தில் மூன்று பரப்புக் காணி வீடு வளவு நான்கு படுக்கை அறைகளைக் கொண்ட சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: V. மகேந்திரன், 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (C 6057)

1½ மாதப் பெடிகிறி அல்சேஷன் நாய்க்குட்டிகள் (Wormed and Weaned) தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: V. K. திருநாவுக்கரசு, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு- (ஸ்ரீ முருகன் பேக்கரிக்கு அருகாமையில்) (6060)

### Dolly Tea
### டொலி தேயிலை

அதிக சுவை, கூடிய சாயம், நறுமணம், இலவச ஸ்ரிக்கர் இத்தனைக்கும் உடனே நாடுங்கள்:- டொலி தேயிலை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலாசம்:- டொலி, கல்வயல் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (5660)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல் சகலையும் மொத்தமாகவும் (விசேஷ கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

### மைசூர் No. 1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப் பட்டு விற்பனையாகிறது No 1 அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத சுத்தம். சுவை, தரம் நிறைந்த மைசூர் No. 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

### மோட்டர் சைக்கிள் விற்பனைக்கு

Honda Econo Power 90, Charley மோட்டர் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 12, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (6063)

## தேவை

ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பெண் உதவியாளர் தேவை. ஓரளவு தையல் அனுபவம் உள்ளவர்களும், யாழ்நகரின் இரண்டு மைல் சுற்றுடலில் வசிப்பவர்கள் உடன்தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் 3 - 9 - 88 ஆம் திகதி சனிக்கிழமை நேரில் வரவும். சிற்றி என்ரபிரைஸேஸ், (மேல் மாடி) 198 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (5949)

### வேலைக்கு ஆள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள ''பென்ஸி குட்ஸ்'' ஸ்தாபனத்தில் வேலை செய்யவயது 12-15 க்கும் உட்பட்ட பையன்கள் தேவை. தொடர்பு:- 348, C/o உதயன், யாழ்ப்பாணம். (6201)

### வைன்டிங் அன்ட் T.V டெக் உதிரிப்பாகங்கள்

ஸ்பீக்கர் வைண்டிங் ரான்ஸ் போமர், வைன்டிங், பற்றறி சார்ஜர் புதிதாகச் செய்யவும். கசற் பிளேயர், றேடியோ -- திருத்தல் ஆகியவற்றுக்கும். T. V. டெக் உதிரிப் பாகங்களை மலிவாகப் பெற்றுக் கொள்ளவும், பதிவு செய்த புதிய, பழைய பாடல்களைப் பெற்றுக் கொள்ளவும் மினி ரேட் சென்ரர், 3 J. M. C பில்டிங், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (5933)

### வேலை வாய்ப்பு

வீட்டுத் தோட்டங்களில் பூ விதைகள், காய்கறி விதைகள் உற்பத்தி செய்ய விரும்புவோர். தொடர்பு கொள்க: கே. பத்மநாதன், Tropical Sunblest Fruit Company, 34, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (6202)

## வாடகைக்கு

நெல்லியடிச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள (கராஜ்) இரும்புத் தொழிற்சாலை வாடகைக்குக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; நியூட்டன் றிவைன்டிங் வேர்க்ஸ், நெல்லியடி பஸ்நிலையம் முன்பாக நெல்லியடி. (6064)

### தவறிவிட்டது

சி. இராசானந்தன் ஆகிய எனது மனைவியின் 2½ பவுண் எடையுள்ள மாலை (Beadschain) எனதுவீட்டுக்கும் C.T B Depot கோண்டாவிலுக்குமிடையில் 27-08-1988 ஆம் திகதி காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது கீழ்வரும் விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் உரும்பராய் தெற்கு, உரும்பராய். (6204)

### பிரெஞ்ச் மொழி

1988 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட ''பிரெஞ்ச் மொழி'' வகுப்புக்கள் சலுகைக் கட்டணத்தில் 1- 9 88 இல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு:- ''Alliance Francaise De Jaffna'' (யாழ்/ பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்) 130, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [5929]

### TOEFL வகுப்புகள்

இலவச மாதிரி வினாப் பத்திரங்களுடன் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு காலை 10/30—12/30, திங்கள், புதன் காலை 8/30—10/30 தொடர்புகொள்க: S B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6062)

## லிகிதர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஆக 29

இனந்தெரியாத நபர்களால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இ. போ. ச. லிகிதர் ஒருவர் மறுநாள் காலை துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

கல்லடி உப்போடை வாசியான கே. ஜெயராஜா (30)என்பவரே பிரஸ்தாப லிகிதராவார். (ஒ-சி-21)

கட்டடங்கள் கட்டுபவர்களுக்கு

## ஓர் வரப்பிரசாதம்

தரமான சிமெந்து கலவையில் எம்மால் இயந்திரம் மூலம் தயாரிக்கப்பட்டு நன்கு பதனிடப்பட்ட



4'' X 8'' X 16''
6'' X 8'' X 16''

★ அளவுள்ள கல்லுகள் எம்மிடம் உள்ளன இக்கல்லுகளை பாவிப்பதனால் பூச்சுவேலை செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது.

★ மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவும்:

**Builamart Enterprises**
**Manufacturing & Marketing of "Master" Cement Concrete, Hollow Bricks.**
No. 72, MARTIN ROAD, JAFFNA.
(6067)

## தவறிவிட்டது

H. 0450462 இலக்கத்தை உடைய கடவுச்சீட்டு (Passport) டன் ஒரு International Driving Liscence 26. 8. 88 அன்று வவுனியாவில் இருந்து ஒரு வாடகைக் கார் ஒன்றில் யாழ்ப்பாணம் வரும்பொழுது ஆனையிறவுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது

இவற்றைக் கண்டு எடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்:

கமலநாதன் - உமாபதி
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
(6036)

## வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

**B. A. - 1988 டிசம்பர்**
**G. A. Q. - 1989 ஏப்ரல்**

அரசறிவியல்

**திரு. U. T. தமீம்**

**ஆரம்பம்: 1-9-88**

வியாழன் 9. a. m

*BECON*

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C 6440)

## ★ 50 வது பொன் விழா ★



**செல்லப்பா-மகேஸ்வரி**
யாழ்ப்பாணம், கொட்டடி

யாழ்ப்பாணம், கொட்டடி செல்லப்பா - மகேஸ்வரி தம்பதியினர் தமது இல்லற வாழ்வின் 50 வது வருடத்தைப் பூர்த்தி செய்வதன் நிமித்தம் அவர்களை மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்

6032

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஆவணி மாதம் 29 - 08 - 88 திங்கட்கிழமை பிற்பகல் 1 . 30 மணி முதல் 3 . 45 மணிவரை வரும்

★ சுப முகூர்த்தத்தில் ★

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**திருநாவுக்கரசு (திரு)**
(769 பாதை மினிபஸ் சாரதி)
அவர்களுக்கும்

முகமாலையைச் சேர்ந்த
திரு. திருமதி அருளப்பு
அவர்களின் கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**அன்ரநீற்ரா**
அவர்களுக்கும்

முகமாலை மாதா திருப்பதியில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம்

★ அன்புடன் அழைக்கின்றோம். ★

(தனிப்பட்ட அழைப்பு எதுவும் அனுப்பிவைக்கப்படமாட்டாது)
வரவேற்புபசாரம்:- மணமகள் இல்லத்தில் 3 நாட்கள் நடைபெறும்

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
சுன்னாகம் **திருமதி சுப்பையா குடும்பத்தினர்**
தகவல்: K. மனோகர் (கண்ணதாஸ்) (6038)

# FOREIGN JOBS - IRAQ
# வேலைவாய்ப்பு

ஈராக்கில் (Iraq) உள்ள Kirkukஇல் சதாம் நீர்ப்பாசன வேலைத்திட்டத்தில் (Saddam Irrigation Project in Kiruk) (300 K.M. to north of Saghed)

**கீழ் உள்ள வெற்றிடங்கள் வெகு விரைவில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.**

| Item | Category | No Reqd. | | Basic Salary Per month (I. D) |
|---|---|---|---|---|
| 1. | Unskilled Labour | 40 | ... | 60/- |
| 2. | Diesel Mechanic | 26 | ... | 80/- |
| 3. | Petrol Mechanic | 10 | ... | 75/- |
| 4. | Welder | 8 | ... | 75/- |
| 5. | Grader Operator | 6 | ... | 85/- |
| 6. | Wheel Loader Operator | 8 | ... | 85/- |
| 7. | Excavator Operator | 8 | ... | 85/- |
| 8. | Auto Electrician | 4 | ... | 75/- |
| 9. | Industrial Electrician | 8 | ... | 75/- |
| 10. | Building Foreman | 3 | ... | 80/- |
| 11. | Trailer Driver | 8 | ... | 80/- |
| 12. | Dump Truck Driver | 10 | ... | 80/- |
| 13. | Crane Operator | 6 | ... | 90/- |
| 14. | Surveyor | 3 | ... | 200/- |
| | | | | [without overtime] |

(Experience for all Categories minimum 5 years in respective Trades) மேல் உள்ள தகுதிகளிற்கு குறைந்த பட்சம் 5 வருட அனுபவம் குறிப்பிட்ட தரத்திற்கும் ஏற்றவாறு அமைந்து இருக்க வேண்டும்.

Condition of Employment.

1. வயதெல்லை 24 தொடக்கம் 40 வரை
2. ஒப்பந்தகாலம் — 2 வருடம் (**Renewable on mutual agreement**)
3. இலவச இருப்பிட வசதி (**Bachelor type site accomodation Free**)
4. உணவுக்கான கொடுப்பனவு - **I D 15 per month (Meal allowance)**
5. **50% of Basic salary plus overtime remittable in foreign currency but there may be delays up to 12 months for remittance.**
6. திருப்திகாமான முறையில் ஒப்பந்தம் முடிவடைந்ததும் இலவசமாக **Air ticket** வழங்கப்படும்.
7. வருடம் ஒன்றுக்கு **Vacation leave-15 days**
8. எல்லாச் சாரதிகள்/இயக்குநர்கள் கட்டாயமாக **International Driving licence** தேவைப்படும்
9. பிரயாணம் 6 தொடக்கம் 8 கிழமைக்குள்

விண்ணப்பதாரிகள் உடனடியாக பின்வரும் ஆவணங்களுடன் 3 - 9 - 1988, 4 - 9 - 1988 அன்று நேர்முகப்பரீட்சைக்கு கீழ் கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திற்கு நேரில் சமுகமளிக்கவும்.

[1] விண்ணப்பப்பத்திரம் - **Curriculamrita**
[2] கடவுட்சீட்டு - **Passport**
[3] தராதரப்பத்திரங்கள்.

# THE HYDRAULIC ENGINEERING CO. LTD.

3/3 Stanley Thilakaratne Mamatha,
**Nugegoda.**
**(Opposite Cornels)**
Licence No. 429
Approval No. AL / 429 / 7 / 88 (6037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதிப்படை, விடுதலைப்புலிகள், பொதுமக்கள் ஆகிய

# முத்தரப்பிலும் உயிரிழப்புகளை தவிர்க்க யுத்த நிறுத்தமே வழி

## தென்மராட்சி பிரஜைகள் குழுவின் மகஜர்:

கொடிகாமம், ஆக 29

வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவரவும், இந்திய அமைதிப்படை, விடுதலைப்புலிகள், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பில் உயிரிழப்புக்களைத் தவிர்க்கவும் யுத்த நிறுத்தம் ஒன்றே வழி வகுக்கும்.

-தென்மராட்சி பிரசைகள் குழு, இந்திய அமைதிப்படையின் தளபதி மேஜர் ஜெனரல் சர்தேஷ்பாண் டேக்கு அனுப்பி வைத்திருக்கும் மகஜரில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தங்களையும், பளை, பலாலி முகாம் பொறுப்பதிகாரிகளையும் நாங்களும் எமது ஏனைய அமைப்புக்களும், கடந்த 11 ஆம் திகதி சந்தித்த போது பின்வருவனவற்றை வலியுறுத்தியிருந்தோம்.

★ இந்திய அரசும் யுத்த நிறுத்தமொன்றை பிரகடனம் செய்ய வேண்டும். இதற்கு விடுதலைப்புலிகள் மதிப்பளிப்பார்கள்.

விடுதலைப் புலிகள், மதிப்பளியாது விடின் அதன் பிற்பாடு நாம் உங்கள் பக்கம் நிற்போம் என்றோம்;

★ இந்திய அரசுக்கும் அமைதிகாக்கும் படைக்கும் அது ஒரு வரலாறுக இருந்த போதும், உண்மையில் விடுதலைப்புலிகள் 17 பேரில் பன்னிரண்டு பேர் இறக்க நேர்ந்தமை, அதனைத்தடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்காமை, ''திலீபன்'', அன்னை ''பூபதி'' ஆகியோரின். உண்ணாவிரதத்திற்கு மதிப்பளிக்காமைபோன்ற காரணங்கள் விடுதலைப் புலிகள் இந்திய அரசின் மீதும் அமைதிப்படை மீதும் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள்.

இதனால் தாங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டால் இந்திய அரசு தான் விரும்பிய ஒரு தீர்வை தமது மக்கள் மீது திணித்து விடும் என அவர்கள் அஞ்சுகின்றார்கள்.

★ சென்னையில் கைதானவர்களை விடுதலைப் போராளிகள் என்று இந்தியா ஆரம்பம் முதல் ஏற்றுக் கொண்டு வந்திருக்கின்றது. அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர். ஆகவே அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அதன் பின்னர் யுத்தநிறுத்தம் ஒன்றைச் செய்து பேச்சுவார்த்தை தொடர வேண்டும் என்று கூறியிருந்தோம்

நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம்.

**"யுத்த நிறுத்தமொன்றே! பேச்சுவார்த்தைக்கு மட்டுமன்றி, தமிழர்களின் பிரச்சினைகள் தீரவும் முன்னோடியாக அமையும்"**

இந்திய அரசு இனிமேலும் இவ்விடயத்தை இழுத்தடிக்காது - இதனை ஒரு கௌரவப் பிரச்சினையாக எடுக்காது- முழுமையான யுத்த நிறுத்தமொன்றை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இதுவரையுத்தநிறுத்தமொன்றுக்கு விடுதலைப்புலிகள் மதிப்பளிப்பார்கள் என்பது அவர்கள் தரப்பில் தெளிவுபடுத்தப்படாதிருந்தால் அதனை அறிய நாம் அக்கறையாக உள்ளோம்- இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ- 75)

## 'ஷப்ரு' கிண்ண வெற்றிவீரர்கள்



''ஷப்ரு'' சுற்றுக்கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணியை மேலே உள்ள படத்தில் காணலாம். இறுதியாட்டத்தின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வர்த்தக வங்கியின் யாழ் கிளை முகாமையாளர் திரு. எஸ். இராகவன், ஷப்ரு, உதயன்-சஞ்சீவி நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் ஆகியோர் நடுவில் காணப்படுகின்றனர்.

## சு. கவின் செயற்பாடு

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பிரசார நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்களில்— குறிப்பாக முஸ்லிம் கிராமங்களில்- இந்த பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் கட்சிக்கிளைகள் புனரமைக்கப்பட்டும், புதிய கிளைகள் அமைக்கப்பட்டும் வருவதுடன் கட்சி நடவடிக்கைக் குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

## சமய அறிவுப் போட்டி

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தையொட்டி யாழ் மாநகரசபை வழமை போல் இவ்வருடம் சைவ சமய அறிவுப் போட்டியையும், திருமுறைப் பண்ணிசைப் போட்டியையும் நடத்தவிருக்கின்றது.

திருமுறைப் பண்ணிசைப் போட்டி எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமையும், சைவசமய அறிவுப் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நல்லூர் இந்து மகாவித்தியாலயத்தில் (மங்கையர்க்கரசிவித்தியாலயம்) நடைபெறும். (உ-ஐ)

# தமிழக வன்முறைகளுக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

## நெடுமாறன் அறிக்கை

சென்னை. ஆக 29

தமிழ் நாட்டில் இடம் பெறும் வன்முறைச் சம்பவங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எந்த வித சம்பந்தமும் கிடையாது.

-காமராஜ் காங்கிரஸ் தலைவர் ப. நெடுமாறன் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகளை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கவர்னர் அரசு சிறையில் தள்ளியிருக்கிறது.

தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்தவர்களை வஞ்சம் தீர்க்கும் போக்கை, நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் எந்தவிதமான சமூக விரோத செயல்களிலும் ஈடுபட்டதில்லை.

தமிழ் நாட்டில் நடைபெற்ற கொலை- கொள்ளை- குண்டு வீச்சு போன்ற பல செயல்களுக்கு 'ரோ' உளவுத்துறை தான் காரணம் என நான் குற்றம் சுமத்த விரும்புகிறேன். இந்த அமைப்பின் தூண்டுதலின் பேரிலேயே சில இயக்கங்கள் இத்தகைய செயல்களைத் திட்டமிட்டுச் செய்தன.

பிரச்சினையைத் திசை திருப்ப 'ரோ' திட்டமிட்டு செயற்படுகிறது.

தமிழ் நாட்டில் ஈழத் தமிழர்களால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் கொலை, கொள்ளை ஆகியவை குறித்தும் அவற்றோடு 'ரோ' உணவு நிறுவனத்துக்கு உள்ள தொடர்பு பற்றியும் பகிரங்கமான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு இத்தகைய விசாரணை நடத்தப்பட வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்-இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (உ)

## ஜெனி பற்றி முகம்மது!

கொழும்பு. ஆக 29

இருக்கும் வரை அனுபவித்து விட்டு, பின்னர் உதைத்து விட்டு வெளியேறிய திரு. ஜெனிடிமெல் போன் ரோர் குறித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப் பீடம் கவனமாக இருக்கவேண்டும்.

பொரளையில் நடந்த கூட்டம் ஒன்றில்போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மதுமுன் கண்டவாறு தெரிவித்தார். (ஒ - எ)

வயலில் காவல் இருப்போர்

# 'ரோச்லைற்' பாவிக்க முத்துஐயன்கட்டில் தடை!

ஒட்டிசுட்டான், ஆக. 29

வயல்களில் இரவுப் பயிர் பாதுகாப்பில் ஈடுபடுவோர் 'ரோச் லைற்' பாவிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

முல்லைத்தீவின் சில பகுதிகளில்- குறிப்பாக முத்துஐயன்கட்டுப் பகுதியில்- அமைதிப்படையினர் இவ்வாறு உத்தர விட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வனவிலங்குகளிடமிருந்து வயல்களைப் பாதுகாப்பதற்காக முன்னர் துப்பாக்கி வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. பின்னர் 1983இல் ஸ்ரீ லங்கா அரசினுல் அது தடை செய்யப்பட்டது.

அதன் பின்னர் யானை, பன்றி உட்பட வன விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க டோச் லைற்றுகளையே விவசாயிகள் பெரிதும் நம்பியிருந்தனர்.

பிரகாசமுள்ள டோச் லைற்றுக்களை அடித்து கூக்குரலிட்டே வனவிலங்குகளை அவர்கள் பிடித்து வந்தனர்.

தற்போது டோச் லைற் பாவிக்கவும் கூக்குரல் எழுப்பவும் தடை விதிக்கப்பட்டிருப்பதால் விளைந்த பயிர்களைப் பாதுகாக்க என்ன செய்வது என்று தெரியாமல் இப்பகுதி விவசாயிகள் திண்டாடி வருகின்றனர். (உ - 113)

வடபகுதித் தமிழர்கள் பலர்

# புற்று நோய் சிகிச்சை நிபுணர்களாக இருந்தும் இங்கு ஒருவருமில்லையே!

## நோயாளர் சங்கத் தலைவர் கவலை

யாழ்ப்பாணம் ஆக 29

வட-பகுதியைச் சேர்ந்த பல தமிழ் வைத்தியர்கள் புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணர்களாக இருந்தும் எமது மண்ணில்- எமது மக்களுக்குச் சேவை செய்ய- இன்று புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணர் இல்லாதது மிகவும் வெட்கக் கேடானதாகும்.

வட பிராந்திய புற்று நோயாளர் சங்கத் தலைவர் டாக்டர் எம். ஜெகநாதன் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

அனேகமாக தமிழ் டாக்டர்கள் சொந்த மண்ணில் கடமையாற்ற வேண்டியதை மறந்து அந்நிய மண்ணில் மோகம் கொண்டுள்ளனர்.

தெல்லிப்பழை புற்று நோயாளர் வைத்தியர் பிரிவு இயங்க முடியாது இருப்பதற்கு முக்கிய காரணம் புற்றுநோய் வைத்திய நிபுணர்கள் இல்லாமையே ஆகும்

தற்பொழுது தமிழ் டாக்டர் மஹரகம புற்றுநோய் வைத்தியப் பிரிவில் பயிற்றப்பட்டு வருகிறார்.

அவருக்குத் தேவையான பல உதவிகளையும் வட மாகாண புற்று நோயாளர் சங்கம் செய்து வருகிறது.

அவர் உள்ளூரிலும், வெளியூரிலும் பூரண பயிற்சி பெற்று புற்று நோய் சிகிச்சை நிபுணர் என்ற பட்டத்துடன் 1991 ஆம் ஆண்டே சேவைக்கு வரமுடியும்.

இந்த நிலையில் எமது மக்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு நாம் இன்னொருவரின் கையை நாட வேண்டியுள்ளது வெட்கக் கேடானது — என்று அவர் மேலும் தெரிவித்தார். (ெ-11)


சவூதி அரேபியாவிற்கு உடனடி

வேலைவாய்ப்பு

1. S. O. M. C
CLEANERS HOSPITAL
(1) ஆண்கள் 456 SR
(2) பெண்கள் 456 SR

2. AIR PORT
CLEANERS 400 + 100 SR
(ஆண்கள்)
வயது 21 — 49 வரை
பெண்கள்
வயது 30 — 45 வரை
இருவாரத்தில் பயணம்

KUWAIT
CLEANERS 30 KD
3 மாதத்திற்குள் பிரயாணம் செய்யலாம்.
வயது 18 — 48 வரை

T. V. TRAVELS & TOURIST
Kokuvil Station (Front)
Brown Road,
KOKUVIL.
(C-6410)


கருங்கூந்தலே கண்ணுக்குக்கவர்ச்சி




பீகொக்
கூந்தல் சாயம்
யப்பானிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்படுகின்றது!
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளத் தொடர்பு கொள்ளுங்கள்!
விலை ரூபாய் 50/=க்குமேல்
சந்தைப்படுத்துவோர்
சக்தி (பிரைவேட்) லிமிட்டெட்
S.26, 2ம் மாடி, மத்திய கொழும்பு சூப்பர் மார்க்கெட், கொழும்பு:11
Colombo Central Super Market Colombo:11
LANKA COMMERCIAL ARTISTS

திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டமேல்
கல்வி டிப்ளோமா
இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டோருக்கான
விசேட பயிற்சி வகுப்புகள்
முன்னணி விரிவுரையாளர்களான
திரு. நல்லையா, திரு. துரைராஜா
திரு. பேனடிக்பாலன்
ஆகியோரின் இணைந்த சேவை
ஆரம்பம்: 3-9-1988
● இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
● வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பிற்பகல் 1-00 மணிமுதல் — 4-00 மணி வரை
● பகுதி I, பகுதி II, ஆகியவற்றிற்கான புதிய பாடத்திட்டங்கள்
● கட்டணம் ரூபா 180. 00 (மாதாந்தம்)
விபரங்களுக்கு: நேரில் / தபாலில்
ASTAN INSTITUTE
166/1, Hospital Road, JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி) (C-6864)

டியூரோல்®
டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®
ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®
தினமும் டியூரோல்® அருந்துங்கள், அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.
சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.
Pfizer
சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.
® பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.
Grant BJK&E PFL 1157


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காஷ்மீர் இந்தியாவின் பகுதி என்பதைக்காட்ட தேர்தல் நடத்தினேமா?

# வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தை நிரூபிக்க சர்வசன வாக்கெடுப்புத் தேவையில்லை

## கருணாநிதி பேட்டி

சென்னை, ஆக. 29

"காஷ்மீர் இந்தியாவைச் சேர்ந்தது என்பதற்கு எப்படி சர்வசன வாக்கெடுப்பை நடத்தத் தேவையில்லையோ - அதைப் போல இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 'தமிழர் தாயகம்' என்று முடிவெடுக்க மக்கள் வாக்கெடுப்பை நடத்தத் தேவையில்லை" என்று தி. மு. க. தலைவர் கருணாநிதி கருத்து தெரிவித்தார்.

கட்சியின் தலைமை நிர்வாகக்குழுவின் அவசரக் கூட்டம் அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அக்கூட்டத்தின் முடிவில் அவர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

"இலங்கைப் பிரச்சினையைப் பிரதமர் ராஜீவ் காந்தி தனது கௌரவப் பிரச்சினையாகக் கருதாமல், இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடனும் மற்றவர்களுடனும் பேச்சுவார்த்தைக்கு வழிகோல வேண்டுமென்று கோரும் தீர்மானம் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது" என அவர் கூறினார்.

"தமிழ்நாட்டில் தஞ்சம்புகுந்துள்ள நூற்றுக் கணக்கான ஈழத் தமிழர்களைத் தமிழக அரசு கைது செய்து சிறையில் அடைத்திருப்பதைக் கண்டிக்கும் தீர்மானத்தில் மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக இவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று மத்திய மாநில அரசுகள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன" என்றும் அவர் சொன்னார்.

தேவையில்லாமல் தனது அதிகாரத்தைக் காட்டுவதற்காக தமிழக அரசு இந்தநடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும், கடுமையான காயங்களுடன் படுக்கையில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த ஈழத் தமிழர்களும், தீவிர சிகிச்சை பெற்றுவருவோரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்சப்பட்டுள்ளது, 'அலெக்சாண்டர் அரசின் இதயமற்ற நிலையையும், மத்திய அரசின் இதயமற்ற நிலையையும் காட்டுவதாக இருக்கிறதென்றும்' அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (உ-4)

### அபிவிருத்தி மன்றம் அங்குரார்ப்பணம்

பருத்தித்துறை, ஆக. 28

இலங்கை உலர் வலய அபிவிருத்தி மன்றத்தின் யாழ். மாவட்டக்கிளை அண்மையில் யாழ்ப்பாணத்தில் மன்றத்தின் தலைவர் திரு. எஸ். ஸ்ரீ சண்முகராஜாவினால் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது.

இந்த மன்றம் தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு செயற்படும். இம்மன்றத்தின் கிளைகளை சகல கிராமங்களிலும் ஆரம்பிப்பதெனவும், தமிழ்ப் பகுதி மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கென வெளிநாட்டு கடன் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. (உ)

## கொத்தணி அதிபர் மூலமும் காசோலை

மட்டக்களப்பு, ஆக. 28

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலை ஆசிரியர்கள், ஊழியர்கள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் தமது சம்பளக் காசோலைகளை பாடசாலை அதிபர், கொத்தணி அதிபர்கள் மூலம் நேரடியாகப் பெற்றுக் கொள்வர்.

தேசிய பாதுகாப்புச் சபையின் ஆலோசனைப்படி— கல்வி அமைச்சு இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றுடன் நடத்திய இப் பேச்சுவார்த்தையின் பலனாக நாடெங்கிலும் இம்முறை நடைமுறைப்படுத்தப் படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள் சம்பளக் கணக்கு ஒன்றை வங்கியில் ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அதிபருடன் உப அதிபர் அல்லது சிபாரிசு செய்யப்பட்ட மற்றுமோர் ஆசிரியர் வங்கிக் கணக்கிற்காக கையொப்பமிட வேண்டும்.

10 ஆசிரியர்களுக்குக் குறைவான பாடசாலைகளைப் பொறுத்தவரை கொத்தணி அதிபரால் இதற்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள வங்கிக்கணக்கு மூலம் காசோலை வழங்கப்படும். (உ- 21)

## 3ஆவது சிரார்த்த தினம்



**திரு. இராசரத்தினம் விஜயரட்ணம்**
(ராஜநாயகி தியேட்டர் உரிமையாளர், காங்கேசன்துறை)

தோற்றம்: 22-12-1939 மறைவு: 01-09-1985

திதி : 29-8-1988

உம்பிரிவால் நாம் படும்
துயரும், சிந்தும் கண்ணீரும்,
தாங்கொணு தென்று நாம்
இருந்த வேளை,
ஈழத்தமிழினம் கதறி அழும்
ஓலம் கேட்டு "ஐயோ,
எம் தலைவிதியே" என
நொந்து நின்றேம்,
உம்பிரிவால் நாம் உளம்
சோர்ந்து, உடல் மெலிந்து
உறக்கமற்று உயிர்விடும்
நாள் வாராதோ வென்றேங்கி
நிற்க,
ஈழத் தமிழினத்தின் அல்லல்களும்
அவதிகளும், எம்மை அலைக்கழித்து
உருக்குலைத்து வாட்டுதையா!

அன்பு மனைவி, மக்கள்,
உற்றர், உறவினர்.

(6031)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**திரு. செல்லப்பா - சின்னத்தம்பி**

தோற்றம்: 16- 12- 1934 மறைவு: 20- 7- 1988

எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீர் என மறைந்து விட்ட தலைவா! நீங்கள் இன்றி உமது வீடு ஒளியிழந்து விட்டதே! உங்கள் நினைவினுல் இன்னமும் அழுதமனம் ஆறவில்லையே! உங்கள் இழப்பைத் தாங்காது அனைவரும் தவிக்கின்றேம்! உங்கள் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திக்கின்றேம்.

மனைவி, சகோதரர்கள்,
சகோதரி, பெருமக்கள்,
மருமக்கள், மைத்துனர்.

கடகப்புலம் ஒழுங்கை,
ஸ்ரேசனடி, சுன்னுகம். (6026)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 5- 4- 1955

மறைவு: 29- 8- 1980

**திருமதி யோசப் யோகம்மா**



அன்பின் திருவுருவாய் அறிவின்சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், பார்வையின் பசுமரமாய், சிரிப்பில் நிறைமதியாய், குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்போடும் ஆதரவோடும் வாழ்ந்து இடைநடுவில் எம்மை ஆருத் துயரத்தில் விட்டகன்ற எங்கள் அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

கணவன், பிள்ளைகள்

வ. வ. ஜோசப்
72/32, இராசசிங்கம் வீதி,
யாழ்ப்பாணம். (5980)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை சபிண்டீகரண அழைப்பும்



**ஸ்ரீமதி ஷண்முகரத்நம் கனகமுத்து**

தோற்றம்: 15- 8- 1906 மறைவு: 31- 7- 1988

31- 7- 88 இல் காலமான எனது தாயாரின் ஈமக்கிரியைகளிற் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மலர்வளையம் அணிவித்தவர்களுக்கும் ஏனைய உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

அன்னரின் அந்தியேட்டி கிரிமலையில் 30- 8- 88 அன்று காலை நடைபெறும். சபிண்டீகரணம் எமது இல்லத்தில் 31-8-88 (புதன்கிழமை) நிகழும். இவ் வைபவங்களிற் கலந்துகொள்ளுமாறு உற்றர், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றேன்.

ஷண்முக குமரேசன்

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் (5984)

## முக்கிய அறிவித்தல்

### நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலன சபை

இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் திணைக்கள பதிவிலக்கம் HA / 5 / JA 228

மேற்படி ஆலய யாப்பு விதிகளுக்கு அமைய இப்பொழுதுள்ள நிர்வாக சபையின் காலம் 2 வருடங்கள் ஆகும். இக்கால எல்லை 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையும். பின்பு 1-4-1989 இல் புதிய நிர்வாக உறுப்பினர்களின் தெரிவு நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் பொதுச்சபை உறுப்பினர்களிலிருந்தே தெரிவு செய்யப்படுவர். ஆகவே பொதுச் சபை உறுப்பினர்களாக சேர விரும்புவோர் பின்வரும்தகைமைகளைக்கொண்டிருக்கவேண்டும்.

1. 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. இந்துமதத்தைச் சார்ந்தவர்களாகவும் ஸ்ரீ சட்டநாதர் ஆலய வழிபடுநராகவும் இருத்தல் வேண்டும்.
3. தீய ஒழுக்கங்களுக்காக நீதிமன்றம் எதிலும் குற்றப்படாதவராக இருத்தல் வேண்டும்.
4. ஒவ்வொரு அங்கத்தவரும் ஆண்டுச் சந்தாவாகில் ரூபா 25/-ம்ஆயுள் சந்தாவாகில் ரூபா 100/-ம் செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.
5. ஆலயத்தில் வேதனம் பெறும் ஊழியராக இருக்கக் கூடாது.

பொதுச்சபையில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து 6 மாத காலம் முடிவடைந்த உறுப்பினர்கள் மட்டும் நிர்வாக சபைத் தேர்தலில் வாக்களிக்கவும் போட்டியிடவும் உரிமையுடையவர்களாவார்கள்.

ஆகவே பொதுச் சபை உறுப்பினராகச் சேர விரும்புவோர் மேற்படி விதிகளுக்கு அமைய செப்டம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் உரிய சந்தாப் பணத்தை ஆலய காசாளரிடம் கட்டி அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளவும்.

இத் திகதிக்குப் பின் சேரும் பொதுச் சபை உறுப்பினர்கள் நிர்வாக சபைத் தேர்தலில் வாக்களிக்கவோ போட்டியிடவோ அருகதையற்றவர்களாவர்.

வ. பரமசிவம்
செயலாளர்
ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலன சபை. (6061)


## பிரயாண ஒழுங்குகள்

GOLDEN TRAVELS & TOURS

## SAUDI ARABIA

1. ஓட்டோ எலக்றிசன் 650 + 150 FA
2. ஓட்டோ மெக்கானிக் 650 + 150 FA
3. Gen. Electrician 750 + 150 FA
4. Civil Supervisor 900 + 200 FA
5. Work Scheduler 1100+100 FA
6. H v a c Split Units/ Central Technicians 900 - 1000 + 100 FA
7. A.C. Technicians 700-800+100 FA
8. Appliances Technicians 800+100 FA

## SINGAPORE

கார் திருத்துனர் 500 S.Dollar (O.T. உண்டு)
ஒப்பந்தம் 2 வருடம்

SHIP: சரக்குக் கப்பலில் வேலை வாய்ப்புக்கள் (கிரேக்கக் கப்பல்)
சம்பளம்: 500 U.S. Dollar
ஒப்பந்தம்: 1 வருடம்

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத்தவறின் கடவுச்சீட்டுத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

காரியாலயங்கள் அனைத்தும் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும் திறக்கப்படும்.

தலைமைக் காரியாலயம்:-

கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
புகையிரத நிலைய வீதி,
சுன்னுகம்.

கிளை 1: கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை 2: கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

(C 6415)



## VACANCIES IN SAUDI ARABIA

We require the following Categories of personal for immediate recruitment.

| CATEGORY | SALARY |
|---|---|
| 1. Auto Electrician | 650+150 FA |
| 2. Mechanic (Desiel & Petrol) | 650+150 FA |
| 3. General Electrician | 750+150 FA |
| 4. Civil Supervisor | 900+200 FA |
| 5. Heavy Equipment Crane Mechanic | 800+100 FA |
| 6. Hvac Technician | 900+100 FA |
| 7. Air Compressor Mechanic | 900+100 FA |
| 8. Technical Manager | — Negotiable |
| 9. Electrician/Electrical Supervisor | — Negotiable |
| 10 Mechanical Supervisor | — Negotiable |
| 11. Telephone Technician | — Negotiable |
| 11. Electronic Supervisor | — Negotiable |

Diploma of I.T.I. Certificates with five (05) years experience.

CALL OVER IN PERSON IMMEDIATELY with Documents and Passport.

**T. V. Travels & Tourist**
Brown Road,
(Railway Station Front)
KOKUVIL.

(C 6432)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்.

**பொருள்:**

காக்கவேண்டிய சிறியதாய் மற்ற இடம் பெரிய பரப்புள்ளதாய், தன்னை எதிர்த்து வந்த பகைவருடைய ஊக்கத்தை அழிக்க வல்லது அரண் ஆகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 32073
29-08-1988 த. பெ. இல. 23


## அசைய மனமில்லையோ!

யாழ்ப்பாணத்தில் தியாகி திலீபன் மட்டக்களப்பில் அன்னை பூபதி ஆகியோர் மூலம் சாத்விகப் போராட்டத்தில் வரலாறு படைத்தவர்கள் தமிழ் மக்கள்.

தற்போது ஸ்ரீலங்காவின் தென்பகுதியில் உள்ள பூஸா முகாமில் இந்த வரலாற்றுப் போராட்டம் தொடர்கிறது.

பூஸா முகாம் தமிழ் அரசியல் கைதிகளின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தான் இங்கு குறிப்பிடுகிறோம்.

இந்தப் போராட்டம் இன்று 16 ஆவது நாளை அடைந்திருக்கிறது.

உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளில் இருவரின் நிலைமை ஆபத்தாக இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் எந்த ஒரு அறிகுறியும் அரசாங்கத்தின் தரப்பில் இருந்து இதுவரை தென்படவில்லை. இது கவலைக்குரியதே. இந்த ஏனோ, தானோ என்ற போக்கு நீடிப்பது நிலைமையை மேலும் சிக்கலாக்கவே உதவும்.

பூஸா முகாம் தமிழ் அரசியல் கைதிகளின் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் இம்மாதம் 14ஆம் திகதி ஆரம்பமானது.

கடந்த ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு இணங்க தம்மை விடுதலை செய்யக்கோரி அவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

ஒப்பந்தத்துக்கு இணங்க இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கைதிகள் விடுதலையையும் போராளிகளின் ஆயுத ஒப்படைப்பையும் தொடர்புபடுத்தும் சரத்து எதுவும் ஒப்பந்தத்தில கிடையாது.

ஆரம்பத்தில் மூன்று கைதிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இரண்டாவது கட்டமாக மேலும் நால்வர் சேர்ந்து கொண்டுள்ளனர்.

முதல் கட்ட உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டுள்ளவர்களிலேயே இருவரின் நிலைமை தற்போது ஆபத்தான நிலையை அடைந்திருக்கிறது.

தம்மை விடுதலை செய்யக்கோரி பூஸா முகாம் கைதிகள் இன்றோ அல்லது நேற்றோ போராட்டம் ஆரம்பிக்கவில்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான நாள் முதல் — அதாவது கடந்த ஒரு வருட காலமாக இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது

பதவியில் இருந்த அரசாங்கங்களினால் காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த பொய் வாக்குறுதிகள் தமிழ் மக்களின் போராட்டம் தீவிரமடைய எவ்வாறு உதவினவோ அதே நிலையில் தான் இன்று பூஸாமுகாம் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டமும் உக்கிரம் அடைந்து வருகிறது.

பூஸா முகாம் கைதிகள் விடுதலை தொடர்பாக கடந்த ஒரு வருட காலத்தில் ஆட்சியாளர்களினால் பல தடவைகள் வாக்குறுதிகள் வழங்கப்பட்டும் அவை நிறைவேற்றப்படவில்லை.

ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டங்களும் வாக்குறுதிகளை நம்பி கைவிடப்பட்டிருந்தன.

சத்தியக்கடதாசி கொடுத்தவர்களிலும் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இன்றும் சிறையில் இருந்து வருகின்றனர்.

நம்பி ஏமாந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆகவே அதி உத்தமரின் எந்த ஒரு பொய் வாக்குறுதியும் இம்முறை பலன் அளிக்காது.

போராளிகளின் ஆயுத ஒப்படைப்பையும் கைதிகள் விடுதலையையும் அரசாங்கம் தொடர்புபடுத்தாது ஒப்பந்தத்துக்கு மதிப்பு அளித்து முழு அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும்.

ஸ்ரீலங்கா அரசு தனது பிடிவாதத்தைத் தளர்த்தி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வழி வகுக்க வேண்டும்.

இந்த விவகாரத்தில் ஸ்ரீலங்கா அரசு பிடிவாதம் காண்பிக்குமானால் நிலைமை மோசம் அடைந்து தமிழர்கள் தங்கள் போராட்டத்தை மேலும் வலுவடையச் செய்வதற்கான நிலையை உருவாக்கும்.

ஸ்ரீலங்கா அரசே இன்னும் அசைய மனமில்லையோ...?

---

ஆப்கன், வளைகுடா, கம்பூச்சிய பிராந்தியப் பிரச்சினைகளுக்கு

# இராணுவ பலத்தின் மூலம் அமைதித் தீர்வு; அமெரிக்கக் கொள்கைக்கு வெற்றி!

## அதிபர் றேகன் வானொலி உரை

வாஷிங்டன், ஆக. 28

இராணுவ பலத்தின் மூலம் பிராந்தியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அமெரிக்காவின் கொள்கை வெற்றி அடைந்துள்ளது.

அமெரிக்க அதிபர் றேகன் நேற்று தனது வாராந்த வானொலி உரையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஆப்கன் தீர்வு, வளைகுடாத்தீர்வு, கம்பூச்சியாவில் இருந்து வியட்னாம் படைகள் விலகல், அங்கோலாவில் இருந்து கியூபாவின் துருப்புக்கள் விலக்கப்படுவது ஆகிய முன்னேற்றங்களுக்கு இந்த அமெரிக்கக் கொள்கையே காரணம்

இந்த உறுதியான கொள்கையை எனது எட்டு ஆண்டு கால ஆட்சி உருவாக்கி அமுல் நடத்தி வருகிறது. இது தொடரப்படவேண்டும். ஆகவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் குடியரசு வேட்பாளரையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

இப்படி அதிபர் றேகன் சொன்னார். (எ)

வெளி உலகில்

## காபூல் மீது கடும் தாக்குதல் 4 பேர் பலி; 12 பேர் காயம்

காபூல், ஆக 28

ஆப்கன் தலைநகரான காபூல் விமான நிலையத்தின் மீது கிளர்ச்சிக்காரர்கள் நேற்று நடத்திய தாக்குதலில் நான்கு பேர் உயிரிழந்தனர்; 12 பேர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

20 ரொக்கட்டுக்களைக் கொண்டு இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது

உயிரிழந்தவர்களில் இரண்டு பேர் குழந்தைகள் என்றும் சொல்லப்பட்டது. (எ)

## மதுரை வங்கிக் கொள்ளை: நான்கு பேர் கைது!

சென்னை ஆக 29

மதுரை வங்கியில் அண்மையில் நடைபெற்ற கொள்ளை தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 25 லட்சரூபா பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டதாகவும்—

ரிவோல்வர், கைக்குண்டுகள் உட்பட பல ஆயுதங்கள் கைபபற்றப்பட்டதாகவும் மதுரை மாநகர் காவல்துறை சுப்பிரின்டன் க.வி.எஸ். மூர்த்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ் நாடு விடுதலை இயக்கம் என்ற பேரில் வன்முறையில் ஈடுபட ஆயுதங்களை வாங்குவதற்காக வங்கிகளைக் கொள்ளையடிக்க இவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும்—

இலங்கைத் தீவிரவாதிகளின் துணையுடனேயே இவர்கள் இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் மதுரை வங்கி ஒன்றில் 75 லட்ச ரூபா நகைகள், பணம் கொள்ளையிடப்பட்டது தெரிந்ததே. (ஒ-க)

## ஈழத் தமிழருக்கான போராட்டம் குறித்து
### தி. மு. க தலைவர் கருணாநிதி

சென்னை, ஆக 29

இலங்கைத் தமிழருக்காக போராட்டம் ஒன்றை எப்போது ஆரம்பிப்பது?

அடுத்தமாதம் 17 ஆம் திகதிக்குப்பிறகு நடக்கவிருக்கும் தி. மு. க பொதுக் குழுக் கூட்டத்தில் போராட்டத் திகதி பற்றி முடிவு செய்யப்படும் என்று கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

அவசியப்பட்டால் அதற்கு முன்பே கழகச் செயற்குழு கூட்டப்படும் என்று திரு. கருணாநிதி தெரிவித்தார்.

மேலும் அவர் சொன்னதாவது;-

சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படாமலேயே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும். இது என்னுடைய கருத்து.

காஷ்மீர் இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்பதற்கு எப்படி சர்வசன வாக்கெடுப்பு தேவை இல்லை என்று முடிவு எடுக்கப்படுகிறதோ, அதைப்போலத்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்று முடிவெடுக்கப்படவேண்டும்.

இப்படி திரு. கருணாநிதி தெரிவித்தார். (ஒ-எ)

## இராணுவத்துக்கு பதவி ஆசை இல்லை; பாக். புதிய தளபதி அறிவிப்பு

இஸ்லாமபாத், ஆக. 28

அரசியலில் தலையிட வேண்டாம் என்று பாகிஸ்தான் இராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய இராணுவத் தளபதி ஜெனரல் மிஸ்ஸா அஸ்லம் பெக் இந்த அறிவுறுத்தலை விடுத்திருக்கிறார்.

பாகிஸ்தான் சுதந்திரம் பெற்ற 41 ஆண்டுகளில் அரைப்பங்கு காலம் இராணுவ ஆட்சியே நடந்து வந்தது. புதிய தளபதி மேலும் சொன்னதாவது;

நாட்டின் இறைமையையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதே ஆயுதப் படைகளின் கடமையாக இருக்க வேண்டும்.

எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி சுதந்திரமான முறையில் பொதுத்தேர்தல் நடைபெற இராணுவம் ஒத்துழைக்கும்

இராணுவத்துக்குப் பதவி ஆசை கிடையாது.

இப்படி புதிய தளபதி சொன்னார். (எ)

## ஈரான் ஜனதிபதி அதிருப்தி

தெஹ்ரான், ஆக 28

வளைகுடா நேரடிப் பேச்சுக்கள் திருப்தி அளிப்பதாக இல்லை என்று ஈரான் ஜனதிபதி அலி கொமேனி தெரிவித்தார்.

ஈராக்கின் விட்டுக்கொடுக்காத தன்மையே இதற்குக் காரணம் என்று ஜனதிபதி மேலும் சொன்னார். (எ)

## காத்மண்டுவில் நேற்றும் நிலநடுக்கம்

காத்மண்டு, ஆக. 28

நேபாளம் காத்மண்டுவில் நேற்றும் நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது.

றிச்ரர்ஸ் கேலில் 4·5 வலு கொண்டதாக இந்த நிலநடுக்கம் இருந்தது.

கடந்த ஞாயிறு ஏற்பட்ட 6·7 வலு கொண்ட நிலநடுக்கத்தில் காத்மண்டுவில் உயிரிழந்தவரின் எண்ணிக்கை 705 என்று அரசு அறிவித்தது. (ஒ-எ)

## அதிபர் ஸியா கட்சியில் பிளவு

இஸ்லாமபாத், ஆக 28

மறைந்த பாகிஸ்தான் அதிபர் ஸியா-உல்ஹக்கின் முஸ்லிம் லீக் கட்சி இரண்டாகப் பிளவு பட்டது.

ஒரு பிரிவுக்கு முன்னாள் பிரதமர் முகமட்கான் ஜுனஜோ தலைமை வகிக்கிறார்.

மற்றப் பிரிவுக்கு எல்லைப்புறமாகாணத்தில் முன்னாள் முதலமைச்சர் ஒருவர் தலைமை வகிக்கிறார். இப்பிரிவின் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

ஜனப். ஜுனஜோவின் பிரிவு இன்று திங்கள் கூடுகிறது. (-எ)

---

# வெளிநாட்டு இராணுவம் இருக்கும்போது சுதந்திரமான தேர்தல் நடத்துவது என்பது கஷ்டம்
### பேராசிரியர் சொல்கிறார்

கொழும்பு, ஆக 29

சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட விதத்தில் தேர்தல்களை நாம் நடத்த வேண்டும். வெளிநாட்டு இராணுவம் இருக்கும்போது சுதந்திரமான நியாயமான தேர்தல் நடத்தத்தப்படுவது கஷ்டமானது என்பதை சரித்திரம் காட்டுகிறது.

பேராசிரியர் ராலப் புல்ஜன்ஸ் முன்கண்டவாறு கொழும்பு கலதாரி மெரிதியன் ஹோட்டலில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

வடக்கு, கிழக்கில் இந்திய அமைதிப்படை உள்ளது. அங்கு மொத்தமாக 15 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்துவது ஒரு வித்தியாசததை ஏற்படுத்தத்தான் செய்யும்

இந்தியாவுடனான எமது எதிர்கால உறவுகள் குறித்து மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

எமது தேசிய பிரச்சினைகளுக்கு தேசிய ரீதியிலான தீர்வு காணப்படவேண்டும்; கட்சி அரசியல் ரீதியில் தீர்வு காணப்படக் கூடாது.

தேர்தல் பற்றித்தான் இப்போது எங்கும் பேச்சாக உள்ளது. தேர்தலைச் சரியானபடி கண்காணிக்கும் அமைப்பு ஒன்று நிறுவப்படவேண்டும்.

இப்படி பேராசிரிய ராலப் புல்ஜன்ஸ் தெரிவித்தார். (ஒ-எ)

## சுவாமி ஜீவானந்தஜீ வேலூர் பயணம்

மட்டக்களப்பு. ஆக.29

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் முதல்வராக கடந்த 22 வருடங்களாக பணியாற்றிய சுவாமி ஜீவானந்தஜீ வேலூர் பயணமானார்.

வைத்திய சிகிச்சை, ஓய்வு ஆகியவற்றிற்காகவே இராமகிருஷ்ண மிஷன் தலைமையகத்தினால் இவர் அழைக்கப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த சுவாமி இராஜேஸ்வரனந்தஜீ நியமனம் பெற்றுள்ளார். (ஒ-சி-21)

## ஊழியர் சேமலாப நிதி: வயது எல்லை நீக்கம்

கொழும்பு, ஆக 29

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் சேருவதற்கு விதிக்கப்பட்டிருந்த வயதுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டு விட்டது.

வேலை செய்யும் காலம் வரை ஒருவர் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் உறுப்பினராக இருக்கலாம்.

முன்னைய நிதித் திட்டத்தின் கீழ் ஒருவர் 55 வயது வரை மட்டுமே உறுப்பினராக இருக்கலாம்.

இனிமேல் இளைப்பாறும் வரை அவர் உறுப்பினராக இருக்க முடியும்.

இருப்பினும் தொடர்ந்து வேலை செய்பவர், விரும்பினால் 55 வயதின் பின்னர், இந்த நிதித் திட்டத்தில் [illegible] பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். (உ-எ)

## மீனவர்களை சவூதி மாலுமிகள் காப்பாற்றினர்

மட்டக்களப்பு, ஆக. 29

ஆழ்கடலில் தத்தளித்த வாழைச்சேனை மீனவர்களை சவூதிக் கப்பல் மாலுமிகள் காப்பாற்றி பாதுகாப்பாக காலித்துறைமுகத்தில் ஒப்படைத்தனர்.

இச் சம்பவம் அண்மையில் வாழைச்சேனை கடலில் இடம் பெற்றது.

அம்மீனவர்கள் கடற்றொழில் அமைச்சு மூலம் வாழைச்சேக்கு அனுப்பு வைக்கப்பட்டனர். (ஒ - சி- 21)

## யாழ் குடா நாட்டில் மீண்டும் பசுமைப்புரட்சி ஏற்படுத்த உழைப்போம்
### அரசாங்க அதிபர் அழைப்பு

பண்டத்தரிப்பு ஆக 29

யாழ் குடாநாட்டில் மீண்டும் பசுமைப் புரட்சி ஏற்பட வேண்டும். எமது விவசாய பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கான இந்த முயற்சியில் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

கமநல சேவை உத்தியோகத்தர்கள், விவசாயவிரிவாக்க இணைக்கள அலுவலர்கள், பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் மத்தியில் உரையாற்றுகையில் யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் இந்த அழைப்பை விடுத்தார்.

தெளிகருவி இலகு கடன் அடிப்படையில் வழங்கும் வைபவம் நல்லூர் கமநல சேவை நிலயத்தில் யாழ் கமநல சேவைப் பணிப்பாளர் திரு. த. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. [illegible] அரச அதிபர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எமது சமுதாயத்தின் முதுகெலும்பாக திகழ்பவர்கள் விவசாயிகள்.

ஆனால் எமக்கு உணவும் உயிரும் கொடுக்கும் விவசாயிகளின் பிற்கால சீவியம் பெரும் வேதனையும் சோதனையும் நிறைந்ததாக இருப்பது கவலைக்குரியது.

எனினும் அண்மையில் விவசாயிகள் ஒய்வூதியத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பது ஆறுதலைத் தருகிறது.

விவாசாயத்துறையை ஊக்குவிக்கவே விவாசாயப் போராட்டத்தை கூர்மைப்படுத்தவே— கடன் அடிப்படையில் தெளிகருவிகள் கொடுக்கப்படுகின்றன.

கடன் அடிப்படையிலும் தெளிகருவி வாங்க முடியாத ஏழை விவாசாயிகள் தமது பகுதி பயிர்ச் செய்கை உத்தியாகத்தர்களிடம் வடகைக்கு அவற்றை எடுக்கலாம் என்றார்.

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### ஏற்றமுற அமைதியே தா! கந்தா!

குன்றுதோ றுடுங் குமரா! சந்தா!
அன்றந்த அமரர்க்க அழிவுசெய் அசுரரை
வென்றுயர் வாழ்வினை அன்னவர்க்கு
அளித்து
நன்றவர் சிறந்திடச் செய்த மாவீரா!
இன்றிங்கு எம்மவர் இடர்மிக நலமெலாங்
குன்றிடும் நிலையினில் வாடுதல் விலக்கியே
என்றுமே ஏற்றமாம் அமைதிதா! எம்மன
மன்றினில் வாழும் நல்லையூர்ச் செல்வனே!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## மன்னார்வரும் அகதிகளுக்கு நிவாரணம் வழங்க இதுவரை அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஆக.29

இந்தியாவிலிருந்துதற்போது மன்னாருக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கும் அகதிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்க இந்த வருடம் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என்று மன்னார் கச்சேரி அகதிகள் புனர் வாழ்வுப் பகுதியின் பிரதான அதிகாரி ஒருவர் வடபகுதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதி திரு. எஸ். மருதப்பிள்ளையிடம் தெரிவித்திருக்கிறார்:

இது சம்பந்தமாகப் புனர் வாழ்வு அமைச்சருடன் தொடர்புகொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அந்த அதிகாரி அவரைக் கேட்டிருக்கிறார்.

இதேவேளையில் இந்தியாவிலிருந்து ஏற்கனவே மன்னார் திரும்பியிருக்கும் அகதிகளுக்கு மன்னார் கச்சேரி மூலம் நாலாயிரம் ரூபாவும், ஆறுமாத காலத்துக்கான உணவும் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு வீட்டு வசதி செய்துகொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து அனுமதி பெற்ற வள்ளங்களில் வந்தவர்களுக்கு ஆயிரம் ரூபாவும், ஒரு மாத கால உணவும் வழங்கப்பட்டிருக்கிறது. (ஒ-ஐ)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம். ஆக.29

அராலி தெற்கு செம்பி தோட்டம் ஸ்ரீ பரமேஸ்வர ஞானவைரவசுவாமி திருக்கோயில் நவோத்தர சஸ்ர சங்காபிஷேகம் நாளை 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும்.

அன்றையதினம் காலை 10 மணியளவில் ஸ்ரீ விநாயகர் உற்சவருக்கு பஞ்சவிம்சதி சங்காபிஷேகமும் மூலமூர்த்திக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் விசேட பூஜையும் நடைபெறும்.

மாலை 3 மணியளவில் சாயரட்சை பூஜையும் நடைபெறும் பகல உற்சவத்தைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைலாஸ் கருவேலன் பற்போடி**
இது முரசு கரைதல் பல்வலி பல் அரணை வாய் நாற்றம் பல் ஆட்டம் போன்ற பல் வியாதிகளுக்குச் சிறந்தது.
**கைலாஸ் குருபற்போடி**
இப்பற்பொடி தினமும் பாவித்தால் பல்வலி, பல் அரணை, வாய்நாற்றம், பல் சீழ் வடிதல், முதலிய தந்த வியாதிகளைக் குணப்படுத்தும்.
**க.செ. கைலாசம்பிள்ளைஅன் சன்ஸ்**
மருந்துச் சரக்கு வியாபாரம்
5 (76), பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

29 - 08 - 1988 திங்கட்கிழமை

**C. S. K. சீயாக்காய் பவுடர்**
இது சீயாக்காய் வெந்தயம், பயறு, பச்சையரிசி ஆகிய நாலு இயற்கைப் பொருள்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. கூந்தலில் உள்ள அழுக்கைப் போக்கி கூந்தலை அடர்த்தியாகவும் ஆரோக்கியமாகவும் கருமையாகவும் வளரச் செய்கிறது.
**க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
மருந்துச் சரக்கு வியாபாரம்
5 (76), பெரியகடை, யாழ்ப்பாணம்.

## சரியான....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வில் நாடுதிரும்பிய அகதிகள் தமது பொருளாதார முயற்சிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏதுவான நிவாரண உதவி செயலகத்தினால் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு இந்தியாவில் இருந்து திரும்பியவர்களில் சிலர், ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் நாட்டில் இருக்க தாம் மட்டும் இந்தியா சென்றவர்கள் ஆவர்.

இத்தகையோரில் கணிசமான அளவினர் தமது குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களின் பெயர்களை கொடுக்கத் தவறியுள்ளனர்.

இதனால் அவர்களது விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களுக்கு விசாரணைக்காகவும் அறிக்கைக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே மேற்கண்ட விவரங்களைத் தமது விண்ணப்பங்களில் கொடுக்கத்தவறியவர்கள் தங்கள் உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு வேண்டிய திருத்தங்களுடன் அவருக்கூடாக மீண்டும் திருப்பி அனுப்பப்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

கொடுப்பனவுகள் பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-5)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

**இராமநாதன் நுண்கலைக்கழகப் பிரவேசத் தேர்வு - 1988**

25—8—88 அன்று நடைபெறவிருந்த வீணை, மிருதங்கத்துக்கான பிரவேசத் தேர்வு, 31 - 8 - 88 புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு திருநெல்வேலியிலுள்ள பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் நடைபெறும்.
28-8-1988. பதிவாளர்.
(C 6445)

**அச்சுவேலியில் மீண்டும்**
**★ காவேரி ★**
29-8-88 தொடக்கம் குதூகல ஆரம்பம். சகல விதமான புடவை வகைகளும் சிறுவர் சிறுமியர்க்கான றெடிமெட் ஆடை வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்:
**காவேரி ரெக்ஸ் சென்ரர்**
பஸ் நிலைய முன்பாக, அச்சுவேலி.
நிர்வாகிகள்.
(6066)

**ஹரன் வெண்திரையில்**
இன்று முதல்
தினசரி 10. 30, 2. 30, 4. 30
**BAD BOYS**
The Sensational & Sentimental Acts of Incorrigible 'BAD BOYS'
(Adults only)
(6039)

**அம்பாள் வீடியோ சென்ரர்**
**எமது புதிய வெளியீடுகள்**
இசைத்தட்டுகள் ஒலிப்பதிவுக்கு மட்டும்
★ சோலைக்குயில் L. P No. 1287
★ தாயம் ஒண்ணு L P No. 800. 700
★ உன்னால் முடியும் தம்பி L. P No. 800. 709
★ டிஸ்கோ டிஸ்கோ L. P No. 8516
★ பூ பூத்த நந்தவனம் E. P No. 1056
(சூரசம்பாரம் விரைவில்)
பக்திப் பாடல்
★ ஸ்ரீ ராம நாமம் L. P No. 2516
★ தேவி தோத்திர மாலை L P No. 502
★ அஷ்ட்ட லட்சுமி புஷ்ப மாலை L. P No. 8501
★ நவரத்தின இசை மாலை L. P No. 8507
894, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
(6033)

## இந்திய மண்ணில்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கருத்து வெளியிடுகையிலேயே அரசுப் பேச்சாளர் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பயமுறுத்தல் ஓர் உண்மையைச் உறுதிப்படுத்துகிறது.

அந்த இயக்கமும் அதன் தலைமைப்பீடமும் ஜனநாயக நடைமுறையில் நம்பிக்கை வைக்கவில்லை என்பதையே இப் பயமுறுத்தல் காட்டுகிறது.

பயங்கரவாதம், வன்செயல் மூலம் தங்கள் எண்ணங்களை அடையலாம் என்று அவர்கள் நம்புகின்றனர்.

இப்பயமுறுத்தல்களைச் சந்திக்க தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளன.

இப்படி அரசுப் பேச்சாளர் சொன்னார். (ஒ-எ)

## இந்திய....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தங்கள் அடுத்தடுத்துக் கேட்டன என்றும் தாங்கள் அவை குறித்து அவ்வளவாக அக்கறை காட்டவில்லை என்றும் இலங்கை இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது.

உடனே ஹெலிக்கொப்டர்கள் அங்கு வந்து சேர்ந்தன. வீதித் தடை போடப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
7- 12- 1936
●
மறைவு:
29- 8- 1987
●
திதி: 16- 9- 1988



**திருமதி கந்தசாமி செல்லம்மா**
[கனகம்மா]

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்து நல்வழி காட்டிய எங்கள் அன்புத் தெய்வமே!

நீங்கள் காத்து வந்த தன்மானம் தரம் கெட்டவர்களால் தட்டி பறிக்கப்படுவதை தாங்க முடியவில்லை என்பதை மரணத்தால் நிரூபித்தீர்களோ! உங்கள் இழப்பைத் தாங்க முடியாமல் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்:- ம. மனோன்மணி, தே சந்திராதேவி (நோர்வே), இ. க. கிருஷ்ணமூர்த்தி (கா. சீ. தொழிற்சாலை)

மருமக்கள்;- இ. மகேந்திரா (சவூதி) க. தேவராசா (நோர்வே)

தாய். சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.
பண்ணாகம்,
சுழிபுரம். (C. 6447)

**எமது நேற்றைய புதிய வெளியீடுகள்**
✶ பிரபு ரூபினி ✶
✶ செந்தில் S. S. சந்திரன் ✶
**'என் தங்கச்சி படிச்சவ'**
திரையுலக பிரபல நடிகர்கள் நடிகைகள் துடுப்பெடுத்தாடும் நிகழ்ச்சி
**'நட்சத்திர கிரிக்கெட்'**
**ஏக்நாத் 10** (வீடியோ பத்திரிகை)
✶ தொடர்ந்தும் பல புதிய வெளியீடுகளை எதிர்பாருங்கள் ✶
**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C.6442)

## இளைஞர் கைது

குருநகர் புதிய சந்தைக்கு எதிரில் உள்ள மாடிக் கட்டடத்தில் நேற்றுக்காலை பத்துமணியளவில் கேட்ட துப்பாக்கிச் சத்தத்தை அடுத்து குறிப்பிட்ட பகுதியை அமைதிப் படையினர் சுற்றிவளைத்தனர் அப்போது இளைஞர் ஒருவரைக் கைது செய்ததுடன் கைத்துப்பாக்கி ஒன்றையும் அங்கு கண்டெடுத்தனர் என்றும் சொல்லப்பட்டது.

## இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகள் மூன்றும் தவணைக்காக இன்று ஆரம்பமாகின்றன.

சில பாடசாலைகள் கடந்த 22ஆம்திகதி ஆரம்பமாகிவிட்டன.

எனினும் ஆரம்ப ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் நடக்கும் 7 பாடசாலைகளும் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதியே ஆரம்பமாகும். (க)

## ஜனதிபதி...,

தாக அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படலாம் என்றும் தெரிகிறது.

கட்சிக்குள் தேர்தல் காலத்தில் ஒற்றுமையைப் பேணுவதற்காக திரு. ஜெயவர்த்தன மீண்டும் போட்டியிடக் கூடும் என்றும்—

உபஜனதிபதி வேட்பாளர் பதவிக்கு பிரதமர் நியமிக்கப்படலாம் என்றும்—

தேர்தல் முடிந்த பின்னர் திரு. ஜெயவர்த்தன ராஜினமாச் செய்து திரு. பிரேமதாஸா ஜனதிபதியாக வர வழிவகுக்கக்கூடிய திட்டம் ஒன்று இக்கூட்டத்தில் பரிசீலிக்கப்படலாம் என்றும் தெரிகிறது. (ஒ-எ)

## மாகாண.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றன. அவை தான் நாட்டின் விதியை நிர்ணயிக்க உதவின.

ஜனநாயகம், நீதி, நியாயம், மக்களின் உரிமைகளின் பெயரால் கேட்கிறோம், நாட்டின் நன்மை கருதி மாகாண சபைத் தேர்தல் செல்லுபடியாகாது என்று அறிவியுங்கள்.

இப்படி கடிதத்தில் மக்கள் விடுதலை முன்னணி கோரியுள்ளது. (ஒ-எ)

## அரபாத் - குயிலர் முக்கிய சந்திப்பு

புதுடில்லி, ஆக 29
பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனப் யசிர் அரபாத் ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் திரு. பெரஸ்டீ குயிலரை சந்தித்து பேசினர்.

மத்திய கிழக்கு அமைதித் திட்டம் ஒன்றை உருவாக்குவது குறித்தும் பலஸ்தீன மக்களுக்காக வெளி அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்தும் சந்திப்பின்போது ஆராயப்பட்டது. (க)

## மின் தாக்கி 14 பேர் பலி

இஸ்லாமாபாத், ஆக 29
பாகிஸ்தானின் கிராமம் ஒன்றில் 40 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றின் மீது சக்திவாய்ந்த மின் சம்பி ஒன்று அறுந்து விழுந்ததினால் 14 பேர் உயிரிழந்தனர்.

## ஊரெழு...

எனினும் இந்தத் தாக்குதலினால் வெளிக்காயம் எதுவும் ஏற்படாத காரணத்தினால் அவர் இது பற்றி எவரிடமும் சொல்லவோ அல்லது மருந்து கட்டவோ இல்லை.

ஆனால் அண்மையில் தலையிடி, தலைச்சுற்று என்பன ஏற்பட்டு அவை மருந்துக்குக் கட்டுப்படாததை அடுத்து இவரை யாழ். வைத்தியசாலையில் அவரது குடும்பத்தினர் அனுமதித்தனர்.

அங்கு மருத்துவ சோதனை செய்து பார்த்த டாக்டர்கள் இவரது மூளைப்பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்ட தாக்குதல் சம்பத்தினாலேயே இந்த நோய் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டனராம்.

அவர் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் அவர் நேற்றுக்காலை 7-30 மணிக்கு மரணமானர்.

இவரது சடலம் யாழ் வைத்தியசாலைச் சவச்சாலையில் விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## கப்பலில்......

(1ம் பக்கத்தொடர்ச்சி)
இல்லாமல் 'தடுமாற்ற' நிலை ஏற்பட்டது.

அரச அதிபர் நீண்ட நேரம் அமைதிப்படை அதிகாரிகளுடன் கலந்து பேசிய பின்னரே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

8 பஸ்களில் அங்கிருந்து இரவிரவாகயாழ். இந்துக் கல்லூரிக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர்.

இம்மாதம் 6ஆம் திகதி நடேஸ்வரா அகதிமண்டபத்தில் நடந்த குண்டுச் சம்பவத்தைத் தொடர்ந்தே இவ்வித திடீர் முடிவு எடுக்கப்பட்டதாக அறியவந்தது.

சனிக்கிழமை இரவு யாழ். இந்துக்கல்லூரிக்கு அழைத்து வரப்பட்ட அகதிகள் அங்கு தங்க வைக்கப்பட்டனர்.

பின்னர் நேற்று இவர்களுக்கான நிவாரணங்கள், உதவிப்பொருள்கள் மற்றும் அடையாள அட்டைகள் என்பன விநியோகிக்கப்பட்டன.

நேற்று மாலை அகதிகள் அனைவரும் தமது சொந்த இடங்களுக்கு பஸ்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அகதிகள் தங்கி இருந்ததால் இந்துக்கல்லூரிப் பிரதேசம் நேற்றுத் தடை செய்யப்பட்ட பிரதேசம் போலக் கணிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள், யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரமுகர்கள் ஆகியோரும் தமது பணிகளை ஆற்றினர்.

சனிக்கிழமை இந்தியாவிலிருந்து 296 குடும்பங்களைச் சேர்ந்த 508 அகதிகள் நாடு திரும்பியிருந்தனர்.

அவர்கள் யாழ் குடாநாட்டின் பருத்தித்துறை, கொடிகாமம், சாவகச்சேரி, நாவாந்துறை, ஊர்காவற்றுறை, காரைநகர், பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய பல பகுதிகளை சேர்ந்தவர்கள். (அ-9-68)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரவணமுத்து பாக்கியம்

முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சரவணமுத்து பாக்கியம் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. சு சரவணமுத்துவின் (முன்னைநாள் ஆனந்தா அச்சக ஸ்தாபகர்-யாழ்ப்பாணம்.) அன்பு மனைவியும், திருமதி இராஜேஸ்வரி செகராஜசிங்கம், திரு. ச. ஸ்ரீஸ்கந்தராசா (உரிமையாளர் திருமால் அச்சகம், யாழ்ப்பாணம்.) திருமதி மங்கையற்கரசி துரைசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. வ. செகராசசிங்கம் (இளைப்பாறிய பிரதான புகையிரத நிலைய அதிபர்), காலம்சென்ற திரு. சி. துரைசிங்கம் (பிரதம இலிகிதர் ஏற்றுமதி இறக்குமதி இலாகா, கொழும்பு), திருமதி யோகேஸ்வரி சிறீஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், தரணீதரன் (மாணவன் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.) சிவசக்தி, செந்தில்வேல், பராசக்தி, சங்கர் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29- 08- 88 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் 'பிருந்தாவனம்' முள்ளானை, இளவாலையில் நடைபெற்று, பகல் 10மணிக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(6040) ச. ஸ்ரீஸ்கந்தராசா

### குணரட்ணம் சண்முகநாதன்

[Microbiologist- U.K]

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குணரட்ணம் சண்முகநாதன் இலண்டனில் காலமானார். இவர் காலம்சென்ற குணரட்ணம் தம்பதிகளின் அன்பு மகனும் கந்தர்மடத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் திருமதி கனகம்மா சுப்பிரமணியம் அவர்களின் மருமகனும் சோதிஸ்வரியின் அன்புக் கணவனும் ராதிகா, சங்கீதா, லக்ஷ்மணனின், அன்புத்தந்தையும் ஜெயசிங்கம் (Jaffna College) காலம் சென்ற பாலசிங்கம், தர்மராசா, திருமதி சரஸ்வதி செல்வரட்ணம்(Colombo), திருமதிமகிழ்தேவி பரமலிங்கம்(Canada) இராசமோகனின் அன்பு சகோதரரும் திருமதி செல்லத்துரை (கால்நடை மருத்துவர் சங்கானை) பரமேஸ்வரன் (U.K), திரு. செல்லத்துரை (Colombo) ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்:
கு. ஜெயசிங்கம்
(6034) (Jaffna College)

### சபாபதி நவரட்ணம்

திரு. சபாபதி நவரட்ணம் அகால மரணமானர். இவர் சுன்னாகம் வரியப்பிளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலங்கைத் துறைமுக அதிகாரசபை பாதுகாப்பு உத்தியோகத்தருமாவார் இவர் பத்மரஞ்சனவின் அன்புக் கணவரும், மோகனராஜ், வசந்தராஜ், ரேணுகா, கலைமேகலா, ஜெயசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (29-08-88) திங்கட்கிழமை இன்று பிற்பகல் 4-00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடியில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல் :
(6041) மனைவி, மக்கள்

### சிவசூரியமூர்த்தி பொன்னுச்சாமி

சாவகச்சேரி வடக்கு மடத்தடியைச் சேர்ந்த சிவசூரியமூர்த்தி பொன்னுச்சாமி அவர்கள் 28-8-88 அன்று காலமானர். அன்னார் சிவசூரியமூர்த்தி, தங்கம்மாவின் அன்புமகனும், தங்கராசா (ஜேர்மனி), பாலசுந்தரம், இராஜேஸ்வரி (ஜேர்மனி) கமலநாதன் (சவூதிஅரேபியா), மனோகரி, இராசபூபதி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரஸ்வதி, கோகிலாதேவி, செல்வரத்தினம், (ஜேர்மனி) மகேஸ்வரன் (அமெரிக்கா) தருமபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரிகைகளுக்காக 29-8-88 இன்று 10 மணிக்கு கண்ணுடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. தருமபாலன்
(6042)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29 08 - 1988 அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Monday 29th August 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org